03.08.2023 சி.சி.1236/2020 அசா.9 கேத்தலின் மேரி

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) முதல் தகவல் அறிக்கையில் சம்பவமானது 10.02.2019 முதல் 13.07.2019 வரையான காலத்தில் ஏற்பட்டதாகச்சொல்லப்பட்டள்ளது என்றால் சரிதான். 09.10.2019 அன்று தான் புகாரைப்பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். சுமார் 85 நாட்கள் கால தாமதமாக முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் எதிரிகள் பெயர் விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெரிந்த எதிரிகள் என்பதால் விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது. சீதனமாக பிரிட்ஜ், இரண்டு சக்கர வாகனம், வாசிங் மெசின், வெட்கிரைண்டர் ஆகியவைகள் கொடுக்கப்பட்டதற்கு பில்கள் எதுவும் வாங்கப்பட்டதா என்றால் புகார்வாதி பில் இல்லை என்று சொல்லிவிட்டார். பொருட்கள் வாங்கியதாக எதிரி ஒப்புக்கொண்டார்.

2) 15 பவுன் நகைகளை வாங்கி எதிரிகள் விற்பனை செய்துவிட்டதாகச்சொல்லி உள்ளதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வீட்டு உரிமையாளர் வீட்டை காலி செய்யச்சொல்லி உள்ளது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தோமோ என்றால் இல்லை. வீட்டின் உரிமையாளர் சாட்சியாக விசாரிக்க ஒத்துழைக்காததால் விசாரிக்கவில்லை. அசா1 க்கும் அவரது சகோதரிக்கும் ரத்தக்காயம் ஏற்பட்டதற்காக மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் நாட்டு வைத்தியரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக சொன்னார்கள். காயம்பட்ட நபர்களை அரசு மருத்துவமனைக்கு நான் தான் அனுப்பியதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதென்றால் சரிதான். இவ்வழக்கில் அரசு மருத்துவர் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை.

3) துணை ஆணையர் அவர்களிடம் புகார் கொடுத்ததாகச்சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பீளமேடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் விசாரணை செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.09.2019 திண்டுக்கல் உதவி ஆய்வாளர் வந்து விசாரணை செய்ததாக சொல்லியுள்ளது தொடர்பாக சாட்சிகள் யாரையும் விசாரித்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து வரைபடம் தயாரித்தேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேல் அதிகாரியின் அழுத்தத்தாலும், கணக்கிற்காக தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றால் சரியல்ல.